ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2496/16 - 2026 ජූලි මස 08 වැනි බදාදා - 2026.07.08
2496/16 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு யூலை மாதம் 08 ஆந் திகதி புதன்கிழமை

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### 1979 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க இலங்கை மகாவலி அதிகாரசபை சட்டத்தின் 24 (1) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

இத்துடன் இணைக்கப்பட்டுள்ள அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள காணிகள் அல்லது பிரதேசங்கள், இலங்கை மகாவலி அதிகார சபையின் கீழ் செயல்படுத்தப்படும் மாதுரு ஓயா தெற்குக்கரை அபிவிருத்தித் திட்டத்தின் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட வேண்டியுள்ளது. இல.41 மற்றும் 1979.06.15 திகதிய வர்த்தமானி மூலம் மகாவலிக்கு உரித்தான விஷேட பிரதேசமாக குறித்த அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள காணிகள் அல்லது பிரதேசங்கள் இலங்கை மகாவலி அதிகார சபையின் அதிகார வரம்பிற்குள் அமைந்துள்ள, மேலும் அப்பகுதியில் தனியார் உரிமை நிரூபிக்கப்படக்கூடிய காணியாக இருந்தால், அச்சட்டத்தின் (இலங்கை மகாவலி அதிகார சபை சட்டத்தின் 1979 ஆம் ஆண்டின் இல. 23) பிரிவு 24 (1)-இன் விதிகளுக்கு இணங்க, எழுத்துபூர்வமாக ஒரு கோரிக்கை விடுக்கப்பட்டு, உரிய விசாரணையின் கீழ் கூறப்பட்ட கோரிக்கையைச் பரிசீலனை செய்து அக்கோரிக்கை உரித்து விசாரணை நடாத்துவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக இத்தால் அறியத்தருகின்றேன்.

**அட்டவணை**

| | |
|---|---|
| மாவட்டம் | : மட்டக்களப்பு மற்றும் அம்பாறை |
| பிரதேச செயலக பிரிவு | : மஹா ஓயா, ஏறாவூர் பத்து, கோறளை பத்து -தெற்கு |
| கிராம சேவை உத்தியோகத்தர் பிரிவு | : 144 பீ/1 போகமுயாய (பகுதி), 201 ஏ ஈரள குளம் (பகுதி), 209 டீ குடும்பிமலை (பகுதி) |
| கிராமத்தின் பெயர் | : மாதுரு ஓயா தென்கரை பிரிவு 01 |
| காணியின் பெயர் | : மாதுரு ஓயா தென்கரை பிரிவு 01 |


*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**வரைபட இல.** : **புவியியல் 1:50000 வரைபட இல. 44 ஒருபகுதி (அரளகன்வில)**

**விசாலம்** : **2511 ஹெக்டயார்**

**கோரிக்கையை சமர்ப்பிப்பதற்கான கடைசித் திகதி : 2026 ஓகத்து 15**

**அத்தகைய கோரிக்கைகளை பதிவுத் தபால்** : **குடியிருப்பு கருத்திட்ட முகாமையாளர் மூலம் பின்வரும் முகவரிக்கு எழுத்து மூலம் அலுவலகம், மண்டலம் B, வெலிகந்த. அனுப்பலாம் அல்லது நேரில் வந்து கையளிக்கலாம்**

**மேலும், மேற்கண்ட அறிவிப்பு பொருந்தும் பகுதியை எளிதாக அடையாளம் காண்பதற்காக, ஜிபிஎஸ் ஆயத்தொலைவுகள் மற்றும் அப்பகுதியைக் காட்டும் வரைபடத்தை இலங்கை மஹாவெலி அதிகார சபையின் உத்தியோகபூர்வ இணையத்தளமான www.mahaweli.gov.lk இலிருந்து பதிவிறக்கம் செய்துகொள்ளலாம், மேலும் அதன் அச்சுப் பிரதியை குடியிருப்பு கருத்திட்ட முகாமையாளர் அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.**

**மேற்கண்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பகுதியில் அமைந்துள்ள ஒரு காணி அல்லது அதன் ஒரு பகுதிக்கு, செல்லுபடியாகும் முழு உரிமைப் பத்திரங்கள், மானியப் பத்திரங்கள், காணி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட உரிமங்கள் அல்லது வேறு எதேனும் செல்லுபடியாகும் பத்திரத்தின் கீழ் உங்களுக்குத் தெளிவான உரிமை, உடைமை இருக்குமானால், அதனை 2026, ஓகத்து 15 ஆம் திகதிக்கு முன்னர், வெலிகந்த, இலங்கை மகாவலி அதிகாரசபை, மண்டலம் B, குடியிருப்பு கருத்திட்ட முகாமையாளர் அலுவலகம், குடியிருப்பு கருத்திட்ட முகாமையாளர் அலுவலகத்தில் பதிவுத் தபால் மூலமாகவோ அல்லது நேரில் சென்றோ எழுத்து மூலமாகவோ சமர்ப்பிக்க வேண்டும். மேலும், நீங்கள் கோரும் காணியின் உரிமையைச் சரிபார்ப்பதற்குத் தொடர்புடைய அனைத்து ஆவணங்களின் சான்றளிக்கப்பட்ட நகல்களையும் (பத்திரம் அல்லது உரிமத்தின் சான்றளிக்கப்பட்ட நகல், ஏதேனும் ஆவணங்கள் இருப்பின் அவற்றின் சான்றளிக்கப்பட்ட நகல்கள், ஏதேனும் காணி உரிமைத் தீர்வுச் சான்றிதழ்கள் இருப்பின் அவற்றின் நகல்கள், ஏதேனும் காணி தொடர்பான வரைபடங்களின் நகல்கள்) எழுத்துபூர்வமான கோரிக்கையுடன் சமர்ப்பிக்க வேண்டும்.**

**தமது உரித்தை சமர்ப்பிப்பவர்களுக்கு, தங்களுக்கு ஒரு கடிதம் அனுப்ப வேண்டியிருந்தால், அதற்காக, சரியான முகவரி, உங்கள் செயல்பாட்டில் உள்ள தொலைபேசி எண் மற்றும் நீங்கள் தற்போது நிரந்தரமாக வசிக்கும் கிராம அலுவலர் பிரிவு உட்பட ஒரு கிராம அலுவலர் அறிக்கையை (குடியிருப்புச் சான்றிதழ்) வழங்க வேண்டும்.**

**குறிப்பிட்ட காணிகளுக்கான உரித்து பரிசீலனை பணி, 01 செத்தெம்பர் 2026 முதல் ஒரு மாத காலத்திற்குள் நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. எனவே, காணி உரித்து பணிக்குத் தேவையான ஆவணங்கள் மேலே குறிப்பிடப்பட்ட தேதிக்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.**

**1979 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க இலங்கை மகாவலி அதிகாரசபை சட்டத்தின் 24 (1) பிரிவின் விதிகளுக்கு இணங்க, மகாவலி B மண்டலத்தின் குடியிருப்பு கருத்திட்ட முகாமையாளருக்கு இந்த விசாரணைகளை நடத்துவதற்கும், ஆவணங்களைக் கோருவதற்கும், மற்றும் தேவைப்பட்டால், பிற தொடர்புடைய நிறுவனங்களுடன் இணைந்து குழுக்களை அமைப்பதற்கும் அதிகாரம் உள்ளது.**

**எச்.எம்.ஜே.கே.ஹேரத்,**
இலங்கை மகாவலி அதிகாரசபையின்
பணிப்பாளர் நாயகம்.

இலங்கை மகாவலி அதிகாரசபை, தலைமை அலுவலகம்,
இல. 500, டி. பி. ஜயா மாவத்தை,
2026, யூலை 07.

EOG 07 - 0130

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*